www.tamilarangam.net

# ஈழம் வாழ் தமிழ் (சிறிலங்கா) மக்களின் இன்றைய அவல நிலை

இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்து வம்சாவழியாக வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் இன்று பெரும்பான்மையாகவுள்ள சிங்கள பௌத்த மக்களால் பெரிதும் துன்புறுத்தப்பட்டு வருகின்றார்கள். என்பது பெரும்பான்மையாகவுள்ள உலகநாடுகள் அறியாத உண்மையாகும். சிறுபான்மை மக்களுடைய அடிப்படை உரிமைகளாகிய பிரஜாவுரிமை, குடியுரிமை, கல்வி, கலை, கலாச்சாரம் முதலியன படிப்படியாக சிங்கள அரசாங்கத்தாலும், சிங்களப்பௌத்த மக்களாலும் பறிக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக மிகவும் தாழ்ந்த நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்கள். அத்துடன் சிறிலங்காவின் வடக்கு, கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ்மக்கள் இராணுவத்தினராலும் பொலிசாரினாலும் மிகவும் கடுமையான முறையில் அடக்கி ஆளப்படுகின்றார்கள். மனிதாபிமானமற்ற இந்த செயலை எதிர்த்து தமிழ் மக்கள் குரல் எழுப்பியபோது சிறிலங்கா அரசாங்கத்தால் தூண்டிவிடப்பட்ட பௌத்த சிங்கள மக்கள், நாடு முழுவதும் இருந்த தமிழ் மக்களை தாக்கி கொடூரமான முறையில் அவர்களது உடமைகளையும் பறித்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு அகதிகளாக அனுப்பப்பட்டனர் (1956, 1958, 1977, 1981) இதனால் சிறுபான்மை மக்கள், இழந்த நாட்டையும் சுதந்திரத்தையும் பெறுவதற்காக தனிநாடு (ஈழம்) கோர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். தனிநாடு காண்பதற்கான போராட்டம் தொடர்ந்து நாட்டில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஆனால் இவ்விடுதலை போராட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட சிறிலங்காவின் வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களும், ஏனைய இடங்களில்வாழும் தமிழ் மக்களும் தொடர்ந்தும் தமது சொந்த மண்ணில் வாழப்பயந்து வெளியேறி உலகின் பலபாகங்களிலும் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

பிரித்தானியர் காலத்தில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காகத் தென் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட தமிழ் மக்கள், பிரித்தானியரிடமிருந்து சிறிலங்கா சுதந்திரமடைந்து குடியரசாக்கப்பட்டபின்னர் இத்தோட்டத் தமிழர்கள் நிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-யும், பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்ட நிலையில் நாடற்ற பிரஜைகளா-
-கக் கணிக்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.
சிங்கள பௌத்த அரசாங்கத்தினால் இனக்கலவரங்கள் உண்டாக்கப்படும்
-போது மிகவும் கொடூரமாகவும் பயங்கரமாகவும் தாக்கப்பட்டு சிறிலங்காவின்
வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அகதிகளாக அனுப்பப்பட்டு அங்கு வாழும்
தமிழ் மக்களால் பேணப்படுகிறார்கள்.

3வது உலக நாடுகள் வரிசையில் அங்கம் வகிக்கும்
சிறிலங்காவானது வளர்ந்துவரும் நாடுகளுக்கான உலக நாடுகளின் உதவிக-
-ளை பெற்று அவ் உதவிகளின் மூலம் சிறுபான்மை மக்களின் மீது பலாத்காரத்-
தை புரியும் வகையில் இராணுவ நடவடிக்கைகளைப் பெருக்கி சிறிலங்காவில்
பரந்து வாழும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறிப்பதன் மூலம்
"மனித உரிமை மீறல்" என்ற நாடுகளின் வரிசையில் அங்கம் வகிக்கின்றது.
இந்நிலையில் சிறிலங்காவிற்கு உலகநாடுகள் உதவி புரியுமானால் 1979ம் ஆண்டு
வியட்நாமில் சீனர்கள் எப்படி நாட்டை விட்டு துரத்தப்பட்டு அலைய நிலைக்கு உள்ளா-
-னார்களோ அதே போன்ற நிலைமை சிறிலங்கவாழ் தமிழ்மக்களுக்கு மிக விரைவில்
ஏற்படும். எனவே தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கத்தின் மனிதாபிமானம-
-ற்ற மிலேச்சத்தனமான செயலுக்கு ஆதரவு அளிக்காமல் அதனைக்கண்டித்தும்
எதிர்ப்பு தெரிவித்தும் சிறிலங்கா வாழ் தமிழ் மக்களின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்-
-கும் (தமிழ் ஈழக் கோரிக்கைக்கும்) ஆதரவளித்து ஒத்துழைப்புத் தாருங்கள்
என்று மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றோம்.

ஈழத்தமிழர்கள்

பிரச்சார வெளியீடு:- ஈழத்தமிழ் மன்றம், சுவிற்சலாந்து.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்